# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 123/மா/2026**

**நாள் 21.09.2026**

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர், தஞ்சாவூர் மாநகராட்சி
(2) உரிமையாளர்,
கண்ணன் மருத்துவமனை, தஞ்சாவூர் --- எதிர்மனுதாரர்கள்

மதுரை–625 018, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 02.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.05.2026 அன்று பெறப்பட்டு 123/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

மதுரை–625 018, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 02.05.2026 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 18.04.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தஞ்சாவூர் மாநகராட்சி, மிட் மருதம் காவேரி நகர், வினோத் மஹால் எதிரில் MIG NEW HOUSING UNIT, எண் 40 இல் உள்ள கண்ணன் மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (SIDE SET BACK) 6 மீட்டர் இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு முன்பாக பொது சாலை உள்ளது (SERVICE ROAD), இடது பக்கம் வாகனம் நிறுத்துவதற்கு சிறிய அளவில் மட்டும் இடம் விடப்பட்டுள்ளது. மருத்துவமனையில் ஏதேனும் விபத்துகள் ஏற்பட்டால் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் 4 பக்கங்களிலும் சென்று வர இயலாதவாறு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இம்மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக, கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மருத்துவமனை மாடியில் தகரம் செட்டு போடப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவமனை கட்டிடம் இரண்டாயிரம் சதுரடிக்கு மேல் உள்ளதாலும் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தப்படும் கட்டிடம் ஆனதால்

(PUBLIC BUILDING) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கட்டிடத்திற்கு திட்ட அனுமதி பெற வேண்டும். ஆனால், அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பபட்டுள்ளது. எனவே, மேற்படி கண்ணன் மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57 கீழ் மூடி முத்திரையிட்டும் (LOCK & SEAL) மற்றும் அகற்றிட (REMOVAL) வும் மற்றும் தமிழ்நாடு அரசாணை எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023–ன் படியும் மற்றும் Barjatya and Another Vs U.P. Avas Evam Parishad and others Reported in 2024 INSC 990, The Hon'ble Supreme Court of India and Kaniz Attmed Vs Sabuddin & Others, Special Leave to Appeal (c) NOS – 12199-12200/2025–ன் படியும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 15.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தஞ்சாவூர் மாநகராட்சி உதவி ஆணையர் தனது 02.06.2026 நாளிட்ட கடிதம் மற்றும் ஆணையாளர் தனது 13.07.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 3728/2026/எம்சிஎப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்:–

''புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 2017ம் ஆண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக தெரிகிறது. இக்கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற விபரம் சமர்ப்பிக்க கோரி கட்டிட நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி உரிமையாளருக்கு படிவம் 1 அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கட்டிட உரிமையாளரால் அனுமதி பெறப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்டாததால் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 2 பூட்டுதல் மற்றும் சீலிடுதல் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி கட்டிட உரிமையாளர் 2017 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக தெரிவித்தார். திரு.வெங்கடேஷ் என்பவரின் 11.06.2026 நாளிட்ட கடிதத்தில் தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் படிவம் 2–ல் குறிப்பிட்டுள்ள 12.06.2026 அன்று தான் வெளியூர் செல்வதாகவும், எனவே 10 நாட்கள் அவகாசம் வழங்கும்படியும் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட தேதியில் அன்னாரின் கட்டிடத்தை ஆய்வு செய்ய இயலவில்லை. மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான ஆயத்த பணிகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவதால், 21.07.2026 அன்று மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்காக மீண்டும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 & 57–ன் கீழ் அறிவிப்பு படிவம் 2, 13.07.2026–ல் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இரண்டாம் எதிர்மனுதாரரான கண்ணன் மருத்துவமனையின் உரிமையாளர் தன்னுடைய 13.07.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று பிற்பகல் 12.15 மணி அளவில் விசாரணைக்கு வரும்படி எனக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. ஆனால் என்னுடைய அம்மா அவர்கள் கல்லீரல் புற்றுநோய் முற்றிய நிலையில்

சிகிச்சை பயனளிக்காமல் மரணிக்கும் தருவாயில் உள்ளதால் என்னால் 14.07.2026 அன்று விசாரணைக்கு வர இயலவில்லை. இந்த கடிதத்தை என்னுடைய உறவினர் சு. கலைமணி த/பெ சுப்ரமணியன் அவர்கள் மூலம் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். என்னுடைய அம்மாவின் Discharge Summaryயை இத்துடன் இணைத்துள்ளேன்.

எங்களுடைய மருத்துவமனை உரிய விதிமுறையில் கட்டப்பட்டுள்ளது. எனவே ஐயா அவர்கள் உரிய ஆணை பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும் ஒரு மாதம் கழித்து விசாரணைக்கு வேறு ஒரு தேதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. மனுதாரர் 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள தஞ்சாவூர் மாநகராட்சி, மிட் மருதம் காவேரி நகர், வினோத் மஹால் எதிரில் உள்ள MIG New Housing Unit, எண்.40ல் உள்ள கண்ணன் மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (Side set back) 6 மீட்டர் இடைவெளி விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மருத்துவ மனைக்கு முன்பாக பொது சாலை உள்ளது (Service Road), இடது பக்கம் வாகனம் நிறுத்துவதற்கு சிறிய அளவில் மட்டும் இடம் விடப்பட்டுள்ளது.

விதி மீறி கட்டிடம் கட்டியது தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 2017–ம் ஆண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக தெரியவருகிறது. கட்டிட உரிமையாளருக்கு நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 1, 03.03.2026 நாளிட்ட தேதியில் அறிவிப்பு வழங்கப்பட்டது.

கட்டிட உரிமையாளரால் கண்ணன் மருத்துவமனை அனுமதி பெறப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 2, 03.06.2026 நாளிட்ட தேதியில் மீண்டும் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் 21.07.2026 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று 13.07.2026 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மருத்துவமனை நிர்வாகிகளை மனுதாரர் பணம் கேட்டதாக மருத்துவமனையின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

21.07.2026 அன்று மேற்கண்ட மருத்துவ மனையின் கட்டிடத்தினை முழுமையாக கள ஆய்வு மேற்கொண்டு விதி மீறல் இருப்பின், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது 2022) ஆகியவற்றின் அடிப்படையில் உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. இரண்டாம் மனுதாரர் தனது தாயாரின் மருத்துவ சிகிச்சை காரணமாக மாற்று தேதி வழங்க கோரியதாலும் மற்றும் மனுதாரர் 14.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததாலும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.08.2026 அன்று

நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டது.

9. மேலும், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 10.08.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 6913/2026/எம்சிஎப்3–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

திரு. மயில்சாமி என்பவரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, 21.07.2026 நாளிட்ட கடிதத்தில் கட்டிட உரிமையாளருக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 & 57–ன் படி அறிவிப்பு படிவம் II வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

10. மனுதாரர் தன்னுடைய 20.08.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மனு எண் 123/மா/2026 மற்றும் 164/ந/2026 வழக்கானது 25.08.2026 தேதியில் நேரடியாக விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற கடிதம் கிடைக்க பெற்றேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமலும் முதுகு தண்டுவடம் வலி ஏற்பட்டுள்ளதால் நெடுந்தூரம் பயணம் செய்ய இயலாத காரணத்தினால் நான் 25.08.2026 தேதியில் நேரடியாக விசாரணைக்கு ஆஜராகவதிலிருந்து விலக்கு அளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். மேலும், என்னுடைய புகைப்படம் மற்றும் மாநகராட்சி, நகராட்சி ஆணையர்களின் அறிக்கையில் உள்ளபடி நடவடிக்கை எடுக்கும்படியும் மற்றும் எனது புகார் மனுவில் கூறப்பட்ட படியும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

11. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 24.08.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 3728/2026/எம்சிஎப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''03.03.2026 நாளிட்ட படிவம் 1 அறிவிப்பு தொடர்பாக கட்டிட உரிமையாளரால் அனுமதி பெறப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 2 அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேற்படி கட்டிட உரிமையாளர் 2017 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக தெரிவித்தார். கட்டிட உரிமையாளர் 11.06.2026 நாளிட்ட கடிதத்தில் தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் படிவம் 2–ல் குறிப்பிட்டுள்ள 12.06.2026 அன்று, தான், வெளியூர் செல்வதாகவும், எனவே 10 நாட்கள் அவகாசம் வழங்கும் படியும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்காக மீண்டும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 & 57–ன் கீழ் அறிவிப்பு படிவம் 2 அனுப்பப்பட்டது.

ஆனால், திரு. வெங்கடேஷ் என்பவரின் 27.07.2026 நாளிட்ட கடிதத்தில் தனது தாயார் 13.07.2026 அன்று இறந்துவிட்டதாகவும், கட்டிட ஆய்வை வேறு தேதிக்கு மாற்றி தருமாறும் கோரியுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட தேதியில் அன்னாரின் கட்டிடத்தை ஆய்வு செய்ய இயலவில்லை. எனவே, மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்காக மீண்டும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 & 57–ன் கீழ் அறிவிப்பு படிவம் 2, 10.08.2026–ல் அனுப்பப்பட்டு கள ஆய்வு 13.08.2026–ல் மேற்கொள்ளப்பட்டது.

கட்டிட உரிமையாளர் திரு. P. வெங்கடேசன் அவர்களுக்கு நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 3 அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

**12.** முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் **25.08.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''ஏற்கனவே **14.07.2026** அன்று நடைப்பெற்ற விசாரணையில் தெரிவித்தவாறு தஞ்சாவூர் மாநகராட்சி, MIG New Housing Unit, எண்.40ல் உள்ள மருத்துவமனையின் கட்டிடத்திற்கு **21.07.2026** அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று **13.07.2026** நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் மருத்துவமனையின் உரிமையாளர் தமது தாயார் இறந்து விட்டதாக தெரிவித்ததின் அடிப்படையில் மேற்கண்ட கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்காக மீண்டும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் **1971**ன் பிரிவு **56** மற்றும் **57** கீழ் அறிவிப்பு படிவம் II, 10.08.2026ல் வழங்கப்பட்டு கள ஆய்வு **13.08.2026**ல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் III, **21.08.2026** அன்று வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**13.** இரண்டாம் எதிர்மனுதாரரான கண்ணன் மருத்துவமனை உரிமையாளர் திரு. P. வெங்கடேசன் என்பவர் **25.08.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எனது மருத்துவமனை வருடம் **2019**க்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். அக்கால கட்டத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடத்திற்கு மாறாக சிறிது மாற்றம் செய்யப்பட்டு கட்டப்படும் வழக்கமாக இருந்து வந்தது. அதன்படியே எனது மருத்துவமனையின் கட்டிடம் சிறிது மாறுதலுடன் கட்டப்பட்டது. தஞ்சை மாநகராட்சி மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள பெரும்பான்மையான வணிக கட்டிடங்கள் மற்றும் மருத்துவமனை கட்டிடங்கள், வருடம் **2019**ற்கு முன்பு கட்டப்பட்ட யாவும் சிறு விதிமீறலுடன் கட்டப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். வருடம் **2019**ற்கு பின்பு கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடம் அனுமதிபடி கட்டப்பட்டு வருகின்றன.

வருடம் **2019**ற்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடங்களில் உள்ள விதிமீறல்களை சிலர் தங்களுக்கு சாதகமாகவும், பண பயன் பெறும் நோக்கத்திற்காகவும் அரசு சார்ந்த துறைகளுக்கு மனு அளித்து வருகிறார்கள்.

தஞ்சை மாநகராட்சியால் விதி மீறல் குறிப்பிட்டு தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்பாக தமிழக அரசுக்கு முறையீடு செய்ய உள்ளேன் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**14.** முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், முதலாம் எதிர்மனுதாரரான தஞ்சாவூர் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் ஆணையாளர் ஆகியோரின் அறிக்கைகள், தஞ்சாவூர் மாநகராட்சி தரப்பில் **14.07.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான உதவிப் பொறியாளர் (திட்டம்)–ஆல் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், **25.08.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான உதவி நகர திட்டமிடுநரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மற்றும் இரண்டாம்

எதிர்மனுதாரரான கண்ணன் மருத்துவமனை உரிமையாளர் 25.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தஞ்சாவூர் மாநகராட்சி, மிட் மருதம் காவேரி நகர், வினோத் மஹால் எதிரில் உள்ள MIG New Housing Unit, எண்.40ல் உள்ள கண்ணன் மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (Side set back) இடைவெளி விடாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், மருத்துவமனைக்கு முன்பாக பொது சாலை உள்ளதால், (Service Road), இடது பக்கம் வாகனம் நிறுத்துவதற்கு சிறிய இடம் மட்டும் விடப்பட்டுள்ளது என்பதும், மருத்துவமனையில் ஏதேனும் விபத்துகள் ஏற்பட்டால் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் சென்று வர இயலாதவாறு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், பல உயிர் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்பதும், இம்மருத்துவமனை கட்டிடம் கட்டிட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மருத்துவமனை மாடியில் தகரம் செட்டு போடப்பட்டுள்ளது என்பதும், இம்மருத்துவமனை கட்டிடம் 2000 சதுரடிக்கு மேல் உள்ள பொதுமக்கள் பயன்படுத்தும் இக்கட்டிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திடமிருந்து திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், எனவே, மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் மூடி முத்திரையிட்டும் மற்றும் அகற்றிடவும், மற்றும் தமிழ்நாடு அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 10.01.2023–ன்படியும், நடவடிக்கை எடுக்க தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உத்திரவிடக் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர் மாநகராட்சி, மிட் மருதம் காவேரி நகர், வினோத் மஹால் எதிரில் உள்ள MIG New Housing Unit, எண்.40ல் உள்ள கண்ணன் மருத்துவமனை கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் விடாமலும் மற்றும் இம்மருத்துவமனைக்கு முன்பாக பொது சாலையும், இடது பக்கத்தில் வாகனம் நிறுத்துவதற்கு சிறிய அளவில் மட்டும் இடம் விடப்பட்டு, விதி மீறி கட்டியது தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் 2017–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டதாக மாநகராட்சிக்கு தெரிய வந்ததால், நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 1 அறிவிப்பும், கட்டிட உரிமையாளரால் கண்ணன் மருத்துவமனைக்கு அனுமதி பெறப்பட்ட ஆவணங்களை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்படாததால், நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 2 அறிவிப்பும், 21.07.2026 அன்று மேற்கண்ட மருத்துவ மனையின் கட்டிடத்தினை முழுமையாக கள ஆய்வு மேற்கொள்ள 13.07.2026 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் மருத்துவமனையின் உரிமையாளர் தமது தாயார் இறந்து விட்டதாக தெரிவித்தன் அடிப்படையில் மேற்கண்ட கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்காக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 மற்றும் 57 கீழ் அறிவிப்பு படிவம் II 10.08.2026 அன்று மீண்டும் வழங்கப்பட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் III-ல் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மேற்கண்ட மருத்துவமனை நிர்வாகிகளை மனுதாரர் பணம் கேட்டதாக மருத்துவமனையின் சார்பாக தெரிவிக்கப்பட்டது என்பதும் முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் தஞ்சாவூர் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் ஆணையாளர் ஆகியோரின் அறிக்கைகள், தஞ்சாவூர் மாநகராட்சி தரப்பில் 14.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான உதவிப் பொறியாளர் (திட்டம்)–ஆல் பதிவு செய்யப்பட்ட

வாக்குமூலம், 25.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான உதவி நகர திட்டமிடுநரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் தொடர்பாக, தனது மருத்துவமனை வருடம் 2019க்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் என்பதும், அக்காலக் கட்டத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடத்திற்கு மாறாக சிறிது மாற்றம் செய்யப்பட்டு கட்டப்படுவது வழக்கமாக இருந்து வந்த நிலையில், அதன்படியே தனது மருத்துவமனையின் கட்டிடம் சிறிது மாறுதலுடன் கட்டப்பட்டது என்பதும், தஞ்சாவூர் மாநகராட்சி மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள பெரும்பான்மையான வணிக கட்டிடங்கள் மற்றும் மருத்துவ மனை கட்டிடங்கள் 2019 ஆண்டிற்கு முன்பு கட்டப்பட்ட யாவும் சிறு விதிமீறலுடன் கட்டப்பட்டுள்ளதும், 2019 ஆண்டிற்கு பின்பு கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடம் அனுமதிபடி கட்டப்பட்டு வருகின்றன என்பதும், 2019 ஆண்டிற்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடங்களில் உள்ள விதிமீறல்களை சிலர் தங்களுக்கு சாதகமாகவும், பண பயன் பெறும் நோக்கத்திற்காகவும் அரசு சார்ந்த துறைகளுக்கு மனு அளித்து வருகிறார்கள் என்பதும், விதி மீறல் குறிப்பிட்டு தஞ்சாவூர் மாநகராட்சியால் தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்பாக மேற்கண்ட மருத்துவமனை சார்பாக தமிழக அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80A-ன் கீழ் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மற்றும் 29.08.2026 நாளிட்ட கடித நகல் மற்றும் ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர் மாநகராட்சி, மிட் மருதம் காவேரி நகர், MIG New Housing Unit, எண்.40ல் உள்ள கண்ணன் மருத்துவமனை கட்டிடமானது விதி மீறி கட்டியுள்ளது தொடர்பாக, கள ஆய்வில் கண்ணன் மருத்துவமனை கட்டிடம் 2017–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டதாக மாநகராட்சிக்கு தெரிய வந்ததால், நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 1–ல் அறிவிப்பு வழங்கப்பட்டும், கட்டிட உரிமையாளர் கண்ணன் மருத்துவமனை தொடர்பாக அனுமதி பெறப்பட்ட ஆவணங்களை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்படாததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி படிவம் 2 அறிவிப்பும் மற்றும் படிவம் III அறிவிப்பும் தஞ்சாவூர் மாநகராட்சியால் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்கண்ட மருத்துவமனை உரிமையாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80–A–ன் கீழ் 29.08.2026 நாளிட்ட விண்ணப்பம் அளித்துள்ளார் என இரண்டாம் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில், இப்பொருட்பாடு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது:–

"xxx xxx

9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals. xxx xxx xxx.".

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்ய தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–அன்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் செயலாளருக்கு விண்ணப்பம் செய்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரர் 29.08.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள நிலையில், அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்து அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி, பிளாட் எண்.5–A,
அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை–625 018.

(2) ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்–613 001.

(3) டாக்டர் P. வெங்கடேசன்,
உரிமையாளர்,
கண்ணன் மருத்துவமனை,
40, M I G மருதம், நியூ ஹவுசிங் யூனிட்,
புதுக்கோட்டை சாலை,
தஞ்சாவூர்–613 005.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல் :</u>
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/9/26
செயலாளர்.
23.9.26